முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 309/2022

வா.சா.1 – லட்சுமி

14-06-2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாரிசு சான்று கேட்டு கொடுத்த மனு ஏன் நிராகரிக்கப்பட்டது என்றால் முதலில் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது. அதன்பிறகு ஆர்டிஓ அலுவலகத்தில் ரத்து செய்து நீதிமன்றத்திற்கு செல்ல அறிவுறுத்தினார்கள். என்ன காரணத்திற்காக நிராகரித்தார்கள் என்றால் இன்னொரு நபருக்கு வாரிசு சான்றிதழ் கொடுத்ததால் நிராகரித்து விட்டார்கள். சரியான ஆவணங்களை தாக்கல் செய்யாததால் மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் விசாரணையின் மூலம் இறந்துபோன நபருக்கு 2மனைவிகள் இருப்பதாக தெரிய வந்ததால் வாரிசு சான்றிதழ் கோரி கொடுத்த மனுவை 1ம் பிரதிவாதி நிராகரித்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் கிருஷ்ணமூர்த்தியின் ஒரே மனைவி. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பொறுத்து தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.06.14 06:34:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.